# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.

**Case No. CC.No. 105 of 2023**

**Prosecution Witness : PW4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : **வெற்றி** | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(A1, A2 absent. Petition filed u/s.317 crpc and allowed.)**

**Dated.11.08.2025**

**முதல் விசாரணை**

நான் சிறுகனூர் காளியம்மன் கோவில் தெருவில் வசித்து வந்து ஏர்டெல் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 யை எனக்கு தெரியும். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 வழக்கு சம்பவத்தின் போது சென்னையில் வேலை செய்து வந்தார். அவர் பொங்கல் விடுமுறைக்கு ஊருக்கு வந்திருந்தார். கடந்த 15.01.2023 ம் தேதி இரவு 10 மணியளவில் சிறுகனூரில் உள்ள சமுதாய கூடம் அருகில் நின்று கொண்டிருந்த போது எதிரிகள் இருவரும் சம்பவ இடத்திற்கு வந்து அ.சா.1 யை பார்த்து தேவுடியா, புண்டாமவனே என்று அசிங்கமாக பேசி, கையாலும், கற்களாலும் அவரை அடித்துக் கொண்டிருந்தார்கள். அ.சா.1 கிராமத்தில் உள்ளவர்களிடம் சொல்லி எதிரிகள் இனி இந்த மாதிரி செய்யமாட்டோம் என்று எழுதி கொடுத்தார்கள். பின்னர் மீண்டும் 17.01.2023 ம் தேதி இரவு 11.30 மணியளவில் பொங்கல் விளையாட்டுப் போட்டியானது நடந்து கொண்டிருந்தது. நான், அ.சா.1, மதன் ஆகியோர் காளியம்மன் கோவில்

முன்பு விளையாட்டுப்போட்டி முடிந்த பிறகு நின்று பேசிக் கொண்டிருந்தோம். எதிரிகள் இருவரும் சம்பவ இடத்திற்கு வந்து அ.சா.1 யை பார்த்து எழுதி வாங்கிவிட்டு, ஏன் ஊரில் சொல்லி அசிங்கப்படுத்திவிட்டாய் என்று சொல்லி இருவரும் கையில் வைத்திருந்த கத்தியால் அ.சா.1 யை வெட்ட வந்தார்கள் அதனை அ.சா.1 தடுத்தபோது கத்தியானது அவரது இடது கை கட்டைவிரலில் காயம் ஏற்பட்டது. தலையின் வலதுபுறத்திலும் காயம் ஏற்பட்டது. நாங்கள் வந்தபோது எதிரிகள் இருவரும் அ.சா.1 யை பார்த்து உன்னை உயிரோடு விடமாட்டோம், கொன்றுவிடுவோம் என்று சொல்லி சம்பவ இடத்திலிருந்து சென்றுவிட்டார்கள். பின் அ.சா.1 யை அவரது அப்பா மணிமாறனும், மதனும் சிகிச்சைக்காக மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். பின்னர் போலீசார் அ.சா.1 யை மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரிகள் தரப்பில்)</u>**

காயம்பட்ட அ.சா.1 எத்தனை நாட்கள் மருத்துவமனையில் இருந்தார் என்றால் 2 நாட்கள் மருத்துவமனையில் இருந்தார். நான் எப்போது அ.சா.1 யை மருத்துவமனை சென்று பார்த்தேன் என்றால் 17.01.2023 அன்று பார்த்தேன். அதன்பிறகு மீண்டும் 18.01.2023 அன்று மருத்துவமனை சென்று அ.சா.1 யை பார்த்தேன். சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் 20 பேர் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். அந்த 20 பேரும் உள்ளூரை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். அ.சா.1, அ.சா.2, அ.சா.3 மற்றும் சாட்சி மதன், நான் ஆகியோர் நண்பர்கள் என்றால் சரிதான். நான் 15.01.2023 ம் தேதி எத்தனை மணிக்கு வேலைக்கு சென்றேன் என்றால்

காலை 09.30 மணிக்கு சென்றுவிட்டு மாலை 6 மணிக்கு வந்துவிட்டேன். அ.சா.1 எப்போது ஊருக்கு வந்தார் என்றால் 15.01.2023 ம் தேதி காலை ஊருக்கு வந்தார். 15.01.2023 அன்று ஏற்பட்ட பிரச்சனையில் அ.சா.1 க்கு காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. அ.சா.1 க்கும், எதிரிகளுக்கும் இடையே உள்ள பிரச்சனை குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 17.01.2023 அன்று நான் சிறுகனூர் காளியம்மன் கோவில் வாசலில் நின்று கொண்டிருந்தேன் என்றால் சரியல்ல. கோவிலுக்கு வலதுபுறம் உள்ள மைதானத்தில் நின்று கொண்டிருந்தேன். காயம்பட்ட அ.சா.1 எதிரிகள் மீது காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தாரா என்றால் இல்லை. சம்பவம் குறித்து நான் காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் சத்தம் கேட்டு தான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்றும், நான் வரும்போது எதிரிகள் ஓடிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 க்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றாலும், அவர் ஒரு நாள் தான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றாலும், நான் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க 2 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போலீசார் எங்கு வைத்து விசாரணை செய்தார்கள் என்றால் மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரணை செய்தார்கள். அ.சா.1 க்கு ஏற்பட்ட காயம் யாரால் ஏற்பட்டது என எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவ சமயத்தில், சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவம் குறித்து போலீசார்

என்னை தனிப்பட்ட முறையில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான்.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2025.08.11 20:37:50 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி